17th December 1954]

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, under rule 21 (3) of the Madras Assembly Rules, I move—

'*That instead of the Madras Indebted Agriculturists (Temporary Relief) Amendment Bill*, 1954, *the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill*, 1954, *be taken up first*.' "

* SRI M. NARAYANA KURUP :—" The report of the Madras 12 noon. Dramatic Performances Bill has just been circulated to us after the Proceedings of the House began and that too without the dissenting minutes. Now we are asked to submit our amendments before 5 o'clock this evening. How is it possible, Sir? "

MR. SPEAKER :—" Hon. Members may give their amendments till 11 a.m. to-morrow. The question is—

'That instead of the Madras Indebted Agriculturists (Temporary Relief) Amendment Bill, 1954, the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1954, be taken up first.' "

The motion was put and carried.

III.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS TENANTS AND RYOTS PROTECTION (AMENDMENT) BILL, 1954

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, I beg to introduce the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill[a], 1954, and move—

'*That the Bill be taken into consideration at once*.' "

" Sir, this Bill was originally passed in order to give protection to the tenants against eviction in certain areas. As regards Malabar, after the passing of the Malabar Tenancy Act, 1954, this has been abrogated. The necessity for giving protection to the ryots arises only in cases where the estates have not been taken over and also in other cases which have been declared as estates. This Bill seeks to give protection till the 7th October 1955."

MR. SPEAKER :—" Motion moved—

'That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1954, be taken into consideration at once.' "

SRI S. RAMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஆட்சேபிக்கவில்லை. இருந்தாலும்கூட பல ஜமீன், இனாம் எஸ்டேட்டுகளிலுள்ள கிராமங்களை இன்னும் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வராததினால் இந்தச் சட்டத்தை நீடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. சர்க்கார் இன்னும் ஒரு வருட காலத்திற்கு இந்தச் சட்டத்தை நீடிக்கவேண்டும் என்று கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் சொன்னார். இதுமாதிரி ஒவ்வொரு வருடமும் இந்தச் சட்டத்தை நீடிக்க வேண்டும் என்று இந்தச் சட்டசபையில் கொண்டு வரப்படுகிறது. ஒவ்வொரு தடவையும் நானும் பல அங்கத்தினர்களும் இப்போது இருக்கக்கூடிய

[a] Published in the *Fart St. George Gazette* Extraordinary, dated 6th December 1954.

ஜமீன், இனாம் கிராமங்களை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினோம். சர்க்காரும் ஒவ்வொரு வருஷமும் அவ்வாறு செய்வதாக வாக்குறுதி கொடுத்தார்கள். அப்படியிருந்தும்கூட இன்று நம் முன்பு இந்த மசோதா பிரேரேபிக்கப்பட்டு, இன்னும் பல ஜமீன், இனாம் கிராமங்கள் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் கொண்டுவராததினால் இந்த டெனண்ட்ஸ் அண்டு ரயட்ஸ் ப்ரொடெக்ஷன் சட்டத்தை மீண்டும் ஒரு வருஷத்திற்கு நீடிக்கவேண்டும் என்று கோரப்பட்டு இருக்கிறது. கடந்த பல வருஷங்களாக சர்க்கார் எவ்வளவு ஜமீன், இனாம் கிராமங்களை தம் வசம் எடுத்துக்கொண்டார்கள் என்ற விஷயத்தைப் பற்றி பலதடவை கனம் அங்கத்தினர்கள் சர்க்காரைக் கேட்டும், வற்புறுத்தியும்கூட இன்னும் அந்த விவரம் தெரிவிக்கப்படவில்லை. இதிலிருந்து தெரிகிறது என்னவென்றால் சர்க்கார் இந்த விஷயத்தில் அக்கரை செலுத்தவில்லை. இவ்வாறு அந்தக் கிராமங்களை ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் கொண்டுவராததினால் அங்குள்ள விவசாயிகளுக்கு பல தொந்தரவுகள் ஏற்பட்டு கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் ஜமீந்தார்களால் வெளியேற்றப்படுகிறார்கள். ரயத்துவாரி பிரதேசத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் அனுபவித்து வருகிற வசதிகள் ஜமீன், இனாம் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. உதாரணமாக சர்க்கார் ரயத்துவாரி பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு பலவித கடன் வசதிகள் கொடுக்கிறார்கள். உரம் வாங்குவதற்கும், விதைகள் வாங்குவதற்கும் நிலங்கள் மராமத்து செய்வதற்கும் தக்காவி கடன் போன்ற வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்றன. இதைத் தவிர அவர்கள் நிலங்களை அடகுவைத்தால், கோவாப்ரேடிவ் சொசைடிகளிலும், நில அடமான பாங்குகளிலும் கடன் வாங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆதலால் இம்மாதிரி வசதிகளை ஜமீன், இனாம் விவசாயிகளும் அனுபவிக்கவேண்டுமானால் பாக்கியுள்ள எல்லா ஜமீன் இனாம் நிலங்களையும் சர்க்கார் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் கொண்டுவருவதற்கு கவனம் செலுத்தவேண்டும். அவ்வாறு சர்க்கார் உடனடியாக எடுத்துக்கொள்ள முடியாததற்கு சில காரணங்கள் சொல்லலாம். உதாரணமாக ஜமீன் கிராமங்களை எடுத்துக்கொண்டால் ஜமீந்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு போதிய பணம் சர்க்காரிடம் இப்போது கிடையாது என்று சொல்லலாம். ஆனால் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ், ஜமீன்களை சர்க்கார் எடுத்துக்கொண்டால் உடனடியாக ஜமீந்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. அட்வான்ஸ் தொகைதான் முதலில் செலுத்தவேண்டும். அதற்குப்பிறகு அந்த ஜமீன் எஸ்டேட்டில் ஏற்கெனவே விதிக்கப்பட்ட வரி வருமானத்தைக்கொண்டே ஜமீந்தாருக்கு நஷ்ட ஈடு கொடுக்கலாம். ஆதலால் இந்த விஷயத்தில் பணப் பிரச்னை எழவில்லை. சர்க்கார் மனதுதான் மாறவில்லை. அதுதான் பெரிய பிரச்னையாக இருக்கிறது. இன்றைய தினம் சர்க்கார் ஜமீந்தார்கள் தலையில் கைவைக்கப் பயப்படுகிறார்கள். அதே சமயத்தில் கஷ்டப்படும் விவசாயிகளிடமிருந்து மேலும் மேலும் சுரண்டுவதற்கு கால் வசதி அளிக்கிறார்கள். மேலும் இந்தச் சட்டத்தை ஒரு வருடத்திற்கு நீடிக்கப்போவதால், அதற்குள் எல்லா ஜமீன், இனாம் எஸ்டேட்டுகளைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும். அடுத்த வருஷம் இந்தச் சட்டத்தை மீண்டும் நீடிக்க பிரேரணையைக்கொண்டு வரக்கூடாதென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

***SRI K. T. RAJU** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை இன்னும் ஒரு வருஷத்திற்கு மீண்டும் நீடிக்கவேண்டும் என்று சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது. இதுவரையில் எந்தெந்த ஜமீன், இனாம் கிராமங்களை ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் கொண்டு வந்தார்கள் என்று கனம் மந்திரி அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் எடுத்துரைக்கவில்லை. ஒவ்வொரு வருஷமும் இம்மாதிரி மசோதா கொண்டு வரும்போது அடுத்த வருஷத்திற்குள் எல்லா ஜமீன், இனாம் கிராமங்கள் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார். ஆனால் இன்று வரையில் அவ்வாறு சர்க்கார் ஒன்றும் செய்யவில்லை. கனம் அங்கத்தினர் ராமலிங்கம் சொன்னதுபோல் போன வருஷத்திலிருந்து இந்த வருஷத்திற்குள் இவ்விஷயத்தில் என்ன நடவடிக்கை சர்க்கார் எடுத்துக்

17th December 1954] [Sri K. T. Raju]

கொண்டார்கள். இம்மாதிரி மறுபடியும் ஒரு மசோதா கொண்டுவர மாட்டார்கள் என்று ஒரு உத்திரவாதம் சர்க்கார் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் வேண்டுமென்றால் இம்மாதிரி பாக்கியுள்ள எல்லா ஜமீன், இனாம் எஸ்டேட்டுகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்வதற்கு ஒரு திருத்த மசோதா கொண்டுவரட்டும். இன்றைய தினம் ஜமீந்தார்களும் பெரிய இனாம்தார்களும் அவர்களின்கீழ் வேலை செய்யும் விவசாயிகளை பல கஷ்டத்திற்குள்ளாக்குகிறார்கள். அவர்களுடைய உரிமைகள் பலவகையில் பறிக்கப்பட்டுவருகின்றன. ரயத்துவாரி பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு காண்பிக்கப்படுகிற சில சலுகைகள்கூட இவர்களுக்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. இவர்களும் இந்தச் சலுகைகள் அடையவேண்டும். ஜமீன் ஒழிப்புச் சட்டம் அவர்கள் கிராமத்திற்கும் நீடிக்கப்படவேண்டும். அப்படி நீடிக்கப்படவேண்டுமென்றால் சர்க்கார் அந்த கிராமங்களை எடுத்துக்கொண்டு நிலைமையை சீர்ப்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

* **Sri M. KALYANASUNDRAM** :—"கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு சிறிய மசோதா, இதில் நீண்ட நேர விவாதம் வேண்டியதில்லை என்று சர்க்கார் தரப்பில் அபிப்பிராயப்பட்டார்கள். இருந்தாலும் சர்க்கார் கொள்கையினுடைய ஒரு உண்மை இந்த மசோதாவைக் கொண்டு வருவதில் அடங்கி இருக்கிறது. அதை எடுத்துக்காட்ட நான் விரும்புகிறேன். இந்த மசோதாவில் கூறியிருக்கிறபடி இன்னும் ஒரு வருஷத்திற்கு இந்தச் சட்டத்தை நீடிப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றாலும் சிறிய விவசாயிகளுக்கும் சின்ன ஜமீந்தார்களுக்கும் இதனால் கஷ்டமாக இருக்கிறது. இந்தச் சட்டத்தினால் இனாம்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் நன்மை கிடையாது. இதை சர்க்கார் முதலில் உணரவேண்டும். 12-10 p.m.

" 1948-ம்ஞூல சர்க்கார் ஜமீன் ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்தார்கள். அது அரசியல் பிரசாரத்திற்காகவே என்று தான் முடிவு அடைந்து விட்டது. உடனடியாக இனாம்களையும் மற்ற ஜமீன்களையும் எடுத்துக் கொண்டு விவசாயிகளுக்கு நல்லதை வழங்கவில்லை. அங்குள்ள தகராறுகள் இன்னும் இறுதியாகத் தீர்ந்தபாடில்லை. சர்க்கார் இதுவரையில் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை கொஞ்சம் கவனிக்கவேண்டும். சில பெரிய ஜமீன்களை எடுத்துக்கொண்டுவிட்டார்கள். அதன்படி ஜமீன்களை ஒழித்து விட்டோம் என்று சொல்லுகிறார்கள். அவ்விதம் ஜமீன்களை ஒழித்துவிட்டோம் என்று சொல்லும்போது அவர்கள் ஜமீன்களை ஒழித்தார்களா அல்லது ஜமீந்தார்களுக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். பெரிய ஜமீந்தார்களுக்குப் பாதுகாப்பு கொடுத்துவிட்டு அவர்களுடைய நிலங்களை எடுத்துக்கொண்டோம் என்று சொல்லிவிட்டு அவர்களுக்குப் பணம் கொடுத்துவிட்டு பல சிறிய ஜமீன்களையும், இனாம்களையும் அப்படியே வைத்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமை எப்படி இருக்கிறது என்றால் இனாம்தார்களையும் சிறிய ஜமீந்தார்களையும் ஒரு நிச்சயமில்லாத நிலைமையில் வைத்துவிட்டு ஒவ்வொரு வருஷமும் இந்தச் சட்டத்தை நீடித்துக்கொண்டு வருகிறார்கள். இன்னும் சர்க்கார் அவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளவில்லை. அதற்கு என்ன காரணம் சர்க்கார் சொல்லுகிறார்களென்றால் இப்பொழுது அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப் பணமில்லை என்பது. அவைகள் எல்லாவற்றையும் இப்பொழுது எடுத்துக்கொண்டுவிட்டால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க இப்பொழுது பணம் இல்லை என்று கனம் மந்திரி அவர்கள் சுலபமாக பதில் சொல்லி விடுவார். நான் அவர்களுக்குச் சொல்லுவது என்னவென்றால் : ஜமீந்தார்களுக்குப் பணம் கொடுப்பதற்கு பணம் இல்லை என்றால் புதிதாக வரி ஒன்றும் போடவேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது பெரிய ஜமீன்களை எடுத்துக்கொண்டு அதற்கு நீங்கள் இப்பொழுது நஷ்ட ஈடு கொடுத்துக்கொண்டு வருகிறீர்கள். அப்படி அவர்களுக்குக் கொடுக்காமல் இன்னும் ஒரு வருஷத்திற்கு ஒத்திப்போட்டால் அந்த ஜமீந்தார்கள் பட்டினி கிடந்து இறந்துவிடமாட்டார்கள். அதனால் அவர்கள் கஷ்டப் படவும் மாட்டார்கள். அவ்விதம் நஷ்ட ஈடு கொடுப்பதை ஒத்திப்போட்டு

விட்டு அந்தப் பணத்தைக்கொண்டு இனும்களையும் சிறிய ஜமீன்களையும் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கலாம். அவ்விதம் கொடுப்பதற்கு சர்க்கார் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இனும் பிரதேச விவசாயிகளும் ஜமீன் பிரதேச விவசாயிகளும் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்படும். இதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்."

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" As I said previously, our discussion will be relevant only with reference to the estates. Because, after the passing of the Malabar Tenancy (Amendment) Act, these provisions do not apply to the Malabar area. As for the estates taken over, there is no difficulty. There are still certain estates which have not yet been taken over. The present Act expired on 7th October 1954. We had to promulgate an Ordinance. Now we seek to repeal that Ordinance by the Bill that I have just now moved.

" Regarding the other estates which do not come under the Abolition Act, for instance the 1936 inams, the Government are contemplating bringing forward a suitable piece of legislation which is being drafted. As for the other inams which are not estates, it is a different question and they do not come under the purview of this Bill. This Bill will apply to those estates which have not yet been taken over, and to the estates not covered at present by the Abolition Act.

" As for Sri Ramalingam's point relating to the other inams which have not yet been declared as estates, it is a big and different question. As and when those inams which are called ' minor inams ' are declared estates, that question may be taken up for consideration. But it will not be relevant to consider the case of those inams when we discuss the present Bill. As I said, we are taking all steps necessary to protect the interest of all the tenants and ryots. The present Bill is only intended to protect the ryots in certain places, whose cause our friends on the opposite side are espousing quite often. With regard to the other matters referred to by the hon. Members we will take steps as early as possible."

MR. SPEAKER :—" The question is—

' That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1954, be taken into consideration at once.' "

The motion was put and carried.

Clause 2 was put and carried.

Clause 3.

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, I beg to move the following amendment :—

' *In clause* 3, *for the existing sub-clause* (2), substitute *the following* :—

" (2) *Notwithstanding such repeal, anything done or any action taken in the exercise of any power conferred by or*

17th December 1954] [Sri M. A. Manickavelu Naicker]

under the Madras Tenants and Ryots Protection Act, 1949 (*Madras Act XXIV of* 1949), *as amended by the said Ordinance shall be deemed to have been done or taken in exercise of the powers conferred by or under the said Act, as if this Act were in force on the day on which such thing was done or action taken.*" ' "

MR. SPEAKER :—" In view of the amendment moved by the Hon. Minister, I wish to know whether hon. Member Sri P. S. Krishnasamy Ayyangar is moving his two amendments? "

SRI P. S. KRISHNASAMY AYYANGAR :—" In view of the modified amendment moved by the Hon. Minister, I am not moving my amendments."

MR. SPEAKER :—" The question is—

' In clause 3, for the existing sub-clause (2), *substitute* the following :—

" (2) Notwithstanding such repeal anything done or any action taken in the exercise of any power conferred by or under the Madras Tenants and Ryots Protection Act, 1949 (Madras Act XXIV of 1949), as amended by the said Ordinance shall be deemed to have been done or taken in exercise of the powers conferred by or under the said Act, as if this Act were in force on the day on which such thing was done or action taken." ' "

The amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

The Preamble and clause 1 were put and carried.

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, I now move—

' *That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill,* 1954, *be passed into law.*' "

MR. SPEAKER :—" The question is—

' That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1954, be passed into law.' "

The motion was put and carried and the Bill was passed into law.

(2) THE MADRAS ENTERTAINMENT TAX (AMENDMENT) BILL, 1954

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, I beg to introduce the Madras Entertainments Tax (Amendment) Bill[a], 1954, and move—

' *That the Bill be taken into consideration at once.*'

" Sir, through this Bill it is intended to extend the life of the Act which is already in force. This refers only to the taxing of cinema shows. This is different from the entertainment tax which

[a] Published in the *Fort St. George Gazette*, dated 8th December 1954.